
JOINT PRESS RELEASE:
FAMILIES OF THE
DISAPPEARED FROM ALL
COMMUNITIES IN SRI
LANKA DEMAND ACTION
ON MASS GRAVES
VISITOR



இலங்கைத்தீவ முழுவதிலும் உள்ள பாரிய மனித புதைகுழிகளை தோண்டி ஆய்வு செய்வதில் இலங்கை தொடர் தோல்விகளை சந்தித்து வருவதுடன் கடந்த மூன்று தசாப்தங்களாக வெறும் 20 மனித புதைகுழிகளே தோண்டப்பட்டுள்ளன. அதேவேளை இதுவரையில் எந்த குடும்பத்திற்கும் தங்களது அன்புக்குரியவர்களது மனித எச்சங்கள் கிடைக்கவில்லை என்பது தொடர்பாக சர்வதேச உண்மை மற்றும் நீதித் திட்டத்திற்கான அமையம் (ITJP) இன்று வெளிட்ட கூட்டறிக்கையை தாயகத்திலிருந்து புலம்பெயர்ந்து பிரித்தானியாவில் வாழும் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களிடம் நேரில் சென்று கையளித்தனர்.

தென்னாபிரிக்காலை தளமாகக் கொண்ட இயங்கும் சர்வதேச உண்மை மற்றும் நீதித் திட்டத்திற்கான அமையம் (ITJP), இலங்கையில் ஜனநாயகத்திற்கான ஊடக அமையம் (JDS) மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்தி மையம் (CHRD) மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்கள் அமைப்பு (FOD) ஆகிய மனித உரிமைகள் அமைப்புக்கள் இணைந்து இலங்கையில் மூடிமறைக்கப்படும் பாரிய மனித புதைகுழிகள் பற்றிய ஆய்வு அறிக்கை ஒன்றை இன்று வெளியிட்டிருந்தனர்.

பாரிய புதைகுழிகள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என கோரிநிற்கும் அனைத்து சமூகங்களையும் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் சார்பில் வெளியான இந்த அறிக்கையில் சிறிலங்காவில் நடந்த மோதலின் பல்வேறு காலப்பகுதியைச் சேர்ந்த பாரிய மனிதப் புதைகுழிகளை சிறிலங்கா எவ்வாறு கையாண்டது என்பதையும் பல்லாயிரக்கணக்கான சடலங்கள் நாடாளாவிய ரீதியிலுள்ள புதைகுழிகளில் இன்னமும் புதையுண்டுதான் கிடக்கின்றன என்பதையும் எடுத்துக் கூறுகின்றது.

அதேவேளை, சிறிலங்காவில் அமைக்கப்பட்ட ஏராளமான விசாரணை ஆணைக் குழுக்களில் ஒன்றுகூட பாரிய மனிதப் புதைகுழிகளை விசாரணை செய்வதற்கான ஆணையைக் கொண்டிருக்கவில்லை. மாறாக, உண்மையை வெளிக்கொண்டு வரும் முயற்சிகள் தடைப்பட்டுள்ளன. நீதிபதிகளும், தடயவியல் நிபுணர்களும் திடீர் இடமாற்றங்களுக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர், நீதிமன்ற உத்தரவுகளை நிறைவேற்றுவதை காவல்துறை தாமதப் படுத்தியுள்ளது, குடும்பங்களின் சட்டவாளர்கள் புதைகுழிகள் உள்ள இடங்களுக்குப் போவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது, தற்போதும் உயிருடன் உள்ள சாட்சிகளைக் கண்டறிவதற்கு எந்தவொரு முயற்சியும் எடுக்கப்படவில்லை என்பதையும் விளக்கி நிற்கின்றது.

அதேவேளை இவ்வறிக்கையினை எழுதிய அமைப்புக்கள் சிறிலங்கா அரசாங்கத்திற்கு 4 முக்கிய

பரிந்துரைகளை விடுத்துள்ளன. அதில் பாரிய மனித புதைகுழி அகழ்வுகளை மேற்கொள் சட்டத்தினையும் கொள்கையினையும் இயற்றுதல் முன்மொழியப்பட்டுள்ள சட்டக் கட்டமைப்பு, கொள்கை, மற்றும் பாரிய மனிதப் புதைகுழிகள் மீதான நியம செயற்பாட்டு நடைமுறைகள் என்பன தொடர்பாக, ஐக்கிய நாடுகள் சபை மற்றும் இதர சர்வதேச வல்லுனர்கள் உட்பட, வெளிப்படையான ஆலோசனை செயற்பாடு ஒன்றினை மேற்கொள்ளுதல் பாரிய மனிதப் புதைகுழிகள் தொடர்பானது உள்ளிட்ட நாட்டிலுள்ள தடயவியல் ஆய்வுத்திறனை மேம்படுத்தல். 'தேவையான நிபுணத்துவம் கிடைக்கும் வரை' அகழ்வுப் பணிகளை இடை நிறுத்துவதற்காக காணாமற்போனவர்கள் மீதான அகில இலங்கை ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் சட்டமா அதிபர் அலுவகத்தை மீள்கட்டமைப்புச் செய்தல், சுயாதீன வழக்குத்தொடரும் சேவையொன்றினை உருவாக்கி, அகழ்வுப் பணிகளின் முடிவுகள் தொடர்பான வழக்குகள் விசாரணைகள் சுயாதீனமாகவும் பக்கச்சார்பற்ற முறையிலும் இடம்பெறுகின்றன என்பதை உறுதிப்படுத்தல். ஆகிய கோரிக்கைகளை முன்வைத்துள்ள.

இந்நிலையிலேயே இன்று வெளியாகிய சிறிலங்காவிலுள்ள மனித புதைகுழிகள் தொடர்பான மேற்படி கூட்டறிக்கையை தாயகத்திலிருந்து புலம்பெயர்ந்து பிரித்தானியாவில் வாழும் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள், பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களிடம் நேரில் சென்று கையளித்துள்ளனர்.

இந்த சந்திப்புக்களின் போது இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலை தொடர்பாகவும், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் மற்றும் பாரிய மனித புதைகுழிகள் தொடர்பான விடயங்களை பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெளிவுபடுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஆய்வு அறிக்கையை பெற்றுக் கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் புலம்பெயர் உறவினர்களின் வேதனைகளை அக்கறையுடன் கேட்டதுடன் மேலும் இவ்விடயம் தொடர்பாக தாங்கள் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்புவதாகவும் வாக்களித்தனர்.

இந்நிகழ்வில் இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரித்தானியா வாழ் உறவினர்களின் சங்கத்தின் சார்பில் விஜய் விவேகானந்தன், டிலக்சன் மேனோரஜன், லக்ஷ்மன் திருஞானசம்பந்தர், நிலக்ஜன் சிவலிங்கம், சாருப்பிரியன் ஸ்ரீஸ்கரன், புகழினியன் விக்டர் விமலசிங்கம், மாதவ மேஜர் வேலுப்பிள்ளை, ரோய் ஜக்ஷான் யேசுதாசன், சுபதர்ஷா வரதராசா, சுபமகிஷா வரதராசா ரஞ்சனி பாலச்சந்திரன், செல்வகுமாரி லோகநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.











பிரித்தானிய தொழில்க்கட்சியினரின் தேர்தல் பிரச்சார நிதி சேகரிப்புக்கான இரவு விருந்து ஒன்று கூடலில் கலந்துகொண்ட தமிழ் இளையோர் அணி அங்கு வருகை தந்திருந்த தொழில் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முக்கிய அரசியல் பிரமுகர்களிடம் இலங்கை இராணுவ தளபதியும் இனப்படுகொலை குற்றவாளியுமாகிய சவேந்திர சில்வாக்கு எதிராக பிரித்தானிய தடை விதிக்க வேண்டும் என்ற தமது கோரிக்கையை எடுத்து விளக்கியதுடன், பிரித்தானிய அரசு உடன் நடவடிக்கை எடுக்கும்படி வலியுறுத்துமாறும் கோரிக்கை விடுத்தனர்.

இலங்கையில் இடம் பெற்ற இறுதி யுத்தத்தில் பல்லாயிரம் அப்பாவி தமிழ் மக்கள் கொல்லப்பட்டதற்கு காரணமான 58வது படைப்பிரிவிற்கு தலைமை தாங்கி இராணுவத்தை நேரடியாக வழிநடத்திய சவேந்திர சில்வாவை தடை செய்ய போதுமான ஆதாரங்களை யஸ்மின் சூக்கா தலைமையிலான சர்வதேச உண்மை மற்றும் நீதித்திட்டம் (ITJP) கடந்த ஏப்ரல் 2021 இல், பிரித்தானிய வெளிவிவகார அமைச்சுக்கு சமர்ப்பித்திருந்தது.

ஆனால் இதுவரையில் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சால் எவ்வித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் பிரித்தானியாவின் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுடனும் இது தொடர்பிலான தொடர் சந்திப்புகளை இளையோர் அணி மற்றும் சித்திரவதையில் தப்பித்தவர்கள் மேற்கொண்டு வருகின்றனர். இதில் தமிழர்கள் தரப்பில் வழக்கறிஞர்கள் மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் இரண்டாம் தலைமுறை என பலர் கலந்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அழுத்தங்களை வழங்கி வருகின்றனர்.

இந்த வகையிலே கடந்த 8 ஆம் திகதி நடைபெற்ற பிரித்தானிய தொழிற் கட்சியின் தேர்தலுக்கான நிதி சேகரிப்பு இரவு விருந்து ஒன்று கூடலில் கலந்து கொண்ட தொழிற் கட்சியின் முக்கிய பிரமுகர்களை சந்தித்த இளையோர் அணி அதனை சவேந்திர சில்வாவுக்கு எதிரான பிரச்சாரத்துக்கான களமாக பயன்படுத்திக் கொண்டனர்.

இந்த விடயம் நிழல் வெளிவிவகார அமைச்சர் கௌரவ. டேவிட் லெமி ( Hon David Lammy- Shadow Foreign Affairs Minister)மற்றும் கௌரவ. ஸ்டீவ் ரீட்( Hon Steve Reet), நீதிக்கான மாநில நிழல் செயலாளர் ஆகியோரிடமும் கலந்துரையாடப்பட்டது.

பிரித்தானியாவின் அரசியலில் அடுத்த தேர்தலில் தெற்கு க்ராய்டனுக்கு தொழிலாளர் எம்.பி.யாக போட்டியிட இருக்கும் பென் டெய்லர் ( Ben Taylor) அவர்களை சந்தித்து சவேந்திர சில்வாவை தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை மேற்படி செயற்பாட்டாளர்கள் ஆதரவு திரட்டியிருந்தனர், இதன்போது அவர் எங்கள்

பிரச்சாரத்தை ஆதரிப்பதாகவும், எதிர்காலத்தில் எங்களுடன் இணைந்து பணியாற்ற ஆவலுடன் இருப்பதாகவும் தெரிவித்தார். அத்துடன் அவர் தனது ஆதரவை பகிரங்கமாக தெரிவிக்கும் வகையில் ITJP ஆல் வடிவமைக்கப்பட்ட “Sanction Shavendra Silva” என்ற பச்சைநிற பதாகையை தாங்கியபடி புகைப்படங்களும் எடுத்துக்கொண்டார்.




தொழிற்கட்சிக்கான தமிழர்கள் அமைப்பின் தலைவரான திரு. சென் கந்தையா அவர்களின் தலைமையில் செயற்பாட்டாளர்களான விஜய் விவேகானந்தன், டிலக்ஷன் மனோரஜன், அரவிந்தன் வசந்தி, சிந்துயா ஜெயன், அனுசன் பாலசுப்ரமணியம், வாகீசன் விசாகரெட்ணம், கனகசபாபதி கார்த்திகேசன், விதுரா விவேகானந்தன், முஹமட் சாபிக் ஆஃப்ரின் முஹமட் மற்றும் செலான் பெர்னாண்டோ வர்ணகுலசூரிய ஆகியோர் கொண்ட அணியே மேற்படி பிரச்சார நடவடிக்கையை முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது.





# [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible]!





யாழ்ப்பாணம், அல்லைப்பிட்டி பகுதியில் மேலும் சில மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறை பொலிசார் தெரிவித்துள்ளனர்.

அல்லைப்பிட்டி பகுதியில் முன்னெடுக்கப்பட்ட கட்டுமானப் பணிகளின்போது மண்டை ஓட்டுத் துண்டுகளும் இரு எலும்புகளும் மீட்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் ஊர்காவற்றுறை பொலிஸார் குறித்த பிரதேசத்தை குற்றம் நிகழ்ந்த பிரதேசமாக அடையாளப்படுத்தி நீதிமன்றக் கட்டளையைப் பெற்றிருந்தனர்.

ஊர்காவற்றுறை நீதிவான் கஜநிதிபாலன் முன்னிலையில் குறித்த குழி மேலதிகமாக அகழப்பட்ட நிலையில் 27 பற்கள் உட்பட ஒரு மனித எலும்புகூடு எச்சங்கள் மீட்கப்பட்டிருந்தன.

இதன்போது மேலதிகமான எச்சங்கள் இல்லாத நிலையில் குறித்த சான்றுப் பொருட்கள் ஆய்விற்காக அனுப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் குறித்த மனித எச்சங்கள் சுமார் 20 வருடங்களுக்கு முற்பட்டவையாக இருக்கலாம் என ஊர்காவற்றுறை பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# Call for Ban on Shavendra Silva from British Labour Party Election Campaign Event




A group of passionate Tamil youths recently rallied support from members of parliament attending a dinner event organized for the election campaign of the British Labour Party. The group took this opportunity to elucidate their demand for the British government to impose a ban on Shavendra Silva, the Sri Lankan army commander accused of perpetrating genocide, and urged the attending Labour Party MPs and prominent political figures to take action.




In April 2021, the International Truth and Justice Project (ITJP), led by Yasmin Sooka, presented substantial evidence to the British Foreign Office in support of banning Shavendra Silva. Silva, who directly commanded the 58th Brigade during the final war in Sri Lanka, has been implicated in the deaths of thousands of innocent Tamil individuals. Regrettably, no action has been taken thus far by the British Foreign Office in response to these allegations. Consequently, the group of Tamil youths, along with survivors of torture, have initiated a series of meetings with British Members of Parliament, exerting pressure on them to address this critical issue. Notably, lawyers, human rights activists, and second-generation Tamil community members have also joined forces to amplify the campaign.

Taking advantage of the fundraising dinner for the British Labour Party’s election campaign on the 8th, the aforementioned group of youths utilized the occasion as a platform to raise awareness and garner support against Shavendra Silva. The Shadow Minister of External Affairs, the Honorable David Lammy, and the Shadow Secretary of State for Justice, the Honorable Steve Reed, engaged in discussions regarding this matter.



Within the realm of British politics, the activists also met with Ben Taylor, a Labour Party candidate running for South Croydon in the upcoming election. During the meeting, they advocated for the banning of Shavendra Silva, and Taylor expressed his support for their campaign. He eagerly expressed his willingness to collaborate with the group in the future, and in a symbolic gesture, posed for photographs while holding a green banner designed by the ITJP that read “Sanction Shavendra Silva.”

Leading the campaign under the banner of “Tamils for the Labour Party,” Mr. Sen Kandiah headed a dedicated team comprising activists Vijay Vivekanandhan, Dilukshan Manorajan, Aravinthan Vasanthi, Sinthuya Jayan, Anusan Balasubramaniam, Vageesan Visakaretnam, Kanakasabapathy Karthikesan, Vithura Vivekananthan, Muhammad Chapik Afrin Muhammad, and Chesan Fernando Varnakulasuriya. Their efforts to address the issue at hand have been commendable and noteworthy.